ஆத்தூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம்

குறுகிய கால வினா எண். 50—திரு சி. பழனிமுத்து : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரில் முன்சீப் கோர்ட் உடனடியாக நிறுவும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அமுலுக்கு வரும் ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) : ஆத்தூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு, முன்னுரிமை வரிசைப்படி, கூடுதல் நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பொழுது அனுமதி வழங்க எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் மிகப் பெரிய வட்டம். 50,000 மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே ஆத்தூரில் உடனடியாக மாவட்ட நீதி மன்றம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின்பேரவை செயலர்:) தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் பரிசீலித்து உரிமை இயல் நீதி மன்றம் ஆத்தூரில் தேவை என்று அரசாங்கத்துக்குத் தெரிவித்து இருக்கிறது. அதற்கான முன்வரிசைப் பட்டியலையும் அனுப்பியிருக்கிறது. அந்தப் பட்டியலில் ஆத்தூர் 17ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறது. கிட்டத்தட்ட 10 இடங்களில் நீதிமன்றம் திறக்கப்பட்டு விட்டது. நிதி நிலையைப் பொறுத்து, உடனே அங்கே உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு நீதி மன்றங்களை பரவலாக்க வேண்டும் என்பதற்காக கமிட்டி பார் டிசென்ட்ரலைசேஷன் பார் கோர்ட்ஸ் ஆத்தூருக்கு வந்தது. சிறு வழக்குகள், பெரிய வழக்குகள் என்று கிட்டத்தட்ட 9,000 வழக்குகள் சேலத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டி இருக்கிறது. ஆத்தூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் 2 நிறுவலாம்என்று மாவட்ட நீதிபதிக்கு முன்னால் அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, அந்தக் கமிட்டி செய்த பரிந்துரையை இந்த அரசு அனுதாபத்துடன் கவனிக்குமா ?

1979 ஏப்ரல் 20]

திரு எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே. உயர்நீதி மன்றம் தேவை என்று கருதி அரசுக்கு எழுதியிருக்கிறது. அரசும் தேவை என்று முடிவு எடுத்திருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அங்கே நீதிமன்றம் நிறுவ ஏற்பாடு செய்யப்படும்.

திரு ஒ. சோ. வேலுச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட முன்சீப் கோர்ட்டையும் சப் டிவிஷனல் ஜூடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டையும் இணைத்து ஒரு கோர்ட்டாக ஆக்கும் திட்டத்தை உருவாக்குவதற்கு உயர்நீதி மன்றத்திற்கு அரசு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அது எந்த நிலையில் இருக்கிறது?

திரு எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்கள், பொதுவான கேள்வியைக் கேட்கிறார்கள். இத்தகைய நீதிமன்றத்தை அல்லது சப் டிவிஷனல் கம் முன்சீப் கோர்ட்டை ஏற்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சில இடங்களில் ஏற்படுத்தலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் இல்லை.

கைத்தறி பாலிஸ்டர் துணிகள்

*வினா எண். 713—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கைத்தறியில் நெய்யப்படும் பாலிஸ்டர் துணிகளின் விலையைக் குறைக்கும் வகையில் இதற்கும் மத்திய எக்சைஸ் தீர்வையைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு அண்மையில் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) ஆம்.

(ஆ) கைத்தறியில் தயாராகும் பாலிஸ்டர் துணிக்கு எக்ஸைஸ் வரி விகிதம், மெல்லிய துணிகளுக்கு 33 சத வீதமும், இதர துணி வகைகளுக்கு 50 சத வீதமும் உள்ளது. ஆகையால், கைத்தறியில் தயாராகும் பருத்தி துணிக்கு வரிவிலக்கு அளிக்கப்